எல்லோரும் வாக்காளராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மேலும் முக்கியமாக குடிசைப் பகுதிகளில் மக்கள் குடியேற்றமிருந்ததினுல் வாக்காளர் எண்ணிக்கைக் கூடுதலாகியிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இடைத் தேர்தலுக்கு ஒரு வருடத்திற்கு முன்புதான் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கிறபோது புதிதாக ஜாபிதா தயாரிக்கக்காரணமென்ன? அதற்கு எவ்வளவு செலவு ஏற்பட்டது ? அந்தச் செலவை யார் ஒப்புக்கொண்டார்கள் ? தேர்தல் கமிஷன் ஒப்புக்கொண்டிருக்கிறதா ? இந்த ஜாபிதாவில் வட சென்னையிலே இருந்தவர்கள் பலர் தென் சென்னையிலே சேர்க்கப்பட்டார்கள் என்றும், பலர் ஜாபிதாவிலிருந்தே நீக்கப்பட்டார்கள் என்றும், புகார் இருக்கிறது. அரசாங்கம் அதற்கு என்ன பதில் சொல்லுகிறது ?

மாண்புமிகு திரு சி. என். அண்ணுதுரை : நண்பர் சொன்னது அவ்வளவும் புகார்கள்தான்.

திரு. எம். எத்திராஜிலு : நகரசபைத் தேர்தலுக்கு முன்பு வட சென்னை வாக்காளர் ஜாபிதாவை திருத்தியமைக்க அரசாங்கத்தில் ஏதாவது யோசனையிருக்கிறதா ?

மாண்புமிகு திரு சி. என். அண்ணுதுரை : நகரசபைத் தேர்தலுக்கு முன்னுலே என்ன செய்யலாம் என்பதைப் பற்றி இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறேம்.

Secondary Grade Teachers

* 222 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether Secondary Grade T achers who migrated from Panchayat Union Elementary Schools to Aided High Schools in this State before 1st June 1966 are eligible for the benefit of G.O. Ms. No. 365, Education, dated 15th March 1967 ; and

(*b*) if not, the reasons therefor ?

இடைநிலை ஆசிரியர்கள்

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், பஞ்சாயத்து ஒன்றிப்பு தொடக்கப் பள்ளிகளினின்று மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 1-6-66-க்கு முன் மாற்றப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் 15-3-1967 தேதியிட்ட தமிழ்நாடு அரசாங்கம் கல்வித்துறை 365-ம் எண் ஆணையின் பலனை அடையத்தகுதியுள்ளவர்களா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Tamil Pandits (Grades I and II)

*223 *Q.*—THIRU P. ETHIRAJ : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the total number of Grade I and Grade II Tamil Pandits mployed as Tamil Teachers in the High Schools run by the Government and the private sector ;

(*b*) among them, the number of Grade I Tamil Pandits who are paid the scale of pay of Grade II Tamil Pandits ; and

(*c*) whether the Government will take steps to sanction from this school year the scale of pay admissible to Grade I Tamil Pandits as they are receiving only the scale of pay of Grade II Tamil Pandits in spite of their qualification ?

திரு. பெ. எதிராஜ் : மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) தமிழகத்தில் அரசினர் துறையிலும் தனியார் துறையிலும் நடந்துவரும், உயர்நிலைப் பள்ளிகளில் மொத்தம் எத்தனை முதல் கிரேடு தமிழ்ப் புலவர்கள், எத்தனை இரண்டாவது கிரேடு தமிழ்ப் புலவர்கள், தமிழ் ஆசிரியர்களாக பணிபுரிகின்றனர் ?

(இ) இவர்களில் எத்தனை முதல் கிரேடு புலவர்கள், இரண்டாவது கிரேடு புலவர்கள் சம்பளத்தில் பணிபுரிகிறார்கள் ?

(உ) முதல் கிரேடு புலவர்களாக இருந்தும் இரண்டாவது கிரேடு புலவர்களுக்குரிய சம்பளம் மட்டுமே பெற்று வருகின்றவர்களுக்கு இந்தக் கல்வி ஆண்டு துவக்கத்திலிருந்தே முதல் கிரேடு புலவர்களுக்குரிய சம்பளம் கொடுக்க அரசினர் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) முதல் நிலைத் தமிழாசிரியர்கள் 3,482 ; இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் 2,909.

(இ) 725.

(உ) இல்லை.

திரு பெ. எதிராஜ் : தலைவரவர்களே, தமிழ் மகாநாடு நடத்தி தமிழர்கள் பெருமை உலகெல்லாம் புரிந்துகொள்ளும் நிலையிலே கொண்டாடியிருக்கிறோம். இந்த முதல் கிரேடு படித்துவிட்டு இரண்டாவது கிரேடு வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழ் மொழியைப் படித்தவர்கள் மற்றவர்களைவிட இழிவான நிலைமையில் இருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். ஆகவே, தமிழுக்கு மரியாதை கொடுக்கும் அளவிலாவது, முதல் கிரேடு படித்தவர்கள் இரண்டாவது கிரேடு வேலை பார்த்தாலும், முதல் கிரேடு சம்பளம் கொடுக்க இந்த நிதி ஆண்டிலிருந்தாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் : முதல் கிரேடு என்பது 9, 10, 11 வகுப்புகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பவர்கள். அதற்கு என்று தனியான விதி முறை இருக்கிறது. இரண்டாவது கிரேடு என்பது 6, 7, 8 வகுப்புகளுக்குச் சொல்லிக் கொடுப்பவர்கள். ஆகவே, முதல் கிரேடு படித்தவர்கள், வேலையில்லாத காரணத்தால், வேலை வாய்ப்புக் கிடைக்காதபோது, இரண்டாவது கிரேடில் பணியாற்றுவார்கள். இது அவர்களுடைய வேலைக்கு ஊதியமே தவிர, படிப்பிற்குக் கிடையாது. உதாரணமாக எம்.ஏ. படித்தவர்கள் Upper Divisoin Clerk வேலை பார்த்தால் குறைந்த ஊதியம் கிடைக்கும். அவர்கள் Collector வேலை பார்த்தால் அதற்குத் தகுந்த ஊதியம் கிடைக்கும். 3,000 ரூபாய் சம்பளத்திற்கும் அவர்கள் போகலாம். படிப்பிற்குத் தகுந்த ஊதியம் என்று வைத்து விட்டால் அது சரிப்பட்டு வராது.

திரு பெ. எதிராஜ் : தமிழ்ப் புலவர்கள் தலைமை ஆசிரியர் பதவிக்கு வர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைமை ஆசிரியர்களுக்கென்று சில தகுதிகள், நிலைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் பொருந்தி வந்தால், தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கலாம்.

[8th March 1968

THIRU G. KRISHNAMOORTHY: Has any representation come that after fifteen years of service, those pandits who have practically reached the maximum in the B.T. Scale, should be given the first grade scale ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அந்தத் தகுதி ஆராயப் படுகிற நிலைமையில் இல்லை.

BUS SERVICE TO IRUMBADI VILLAGE

*224 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Works be pleased to state ?

(*a*) the reasons for the stoppage of the regular bus service to Irumbadi village near Solavanthan of Madurai district for one month prior to October 1967;

(*b*) whether the road leading to Irumbadi village has become completely unfit for transport service; and

(*c*) if so, the reason for not repairing the road ?

இரும்பாடி கிராமத்திற்கு பேருந்துகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) மதுரை மாவட்ட சோழவந்தானையடுத்த இரும்பாடி என்னும் ஊருக்கு வழக்கமாகப் போய்க்கொண்டிருந்த பஸ்கள் யாவும் சென்ற அக்டோபர் 1967-க்கு முன்பு ஒரு மாதமாக போகாத காரணம் என்ன ?

(இ) அந்த இரும்பாடி என்னும் ஊருக்குப் போகும் சாலை முழுதும் போக்கு வரத்துக்கு உதவாமல் போய்விட்டதா ?

(உ) ஆமெனில் மராமத்து செய்யாத காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 1967, அக்டோபரில் இச்சாலை யில் 2 மைல் 4 பர்லாங் நீளத்திற்குச் சல்லி போடும் பணி நடந்தது. எனவே இப்பணி நடந்துகொண்டிருந்த காலப் பகுதியில் இச்சாலையில் பேருந்துகள் செல்ல இயலவில்லை.

(இ) and (உ) இரும்பாடிக்குச் செல்லும் சாலையின் நீளம் முழுவதும் போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பேணப்பட்டு வருகிறது.

Free supply of tools

*225 *Q.*—THIRU M. AIYASWAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government have ordered the stoppage of the free supply of tools this year to washermen and barbers : and

(*b*) if so, the reason therefor ?

இலவச தொழிற் கருவிகள்

திரு. எம். அய்யாசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சலவையாளர்களுக்கும், முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கும் ஆண்டுதோறும் இலவசமாகத் தொழிற் கருவிகள் வினியோகிப்பதை இவ் வாண்டு நிறுத்தி வைக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா ?

(இ) அப்படியானல் அதற்குக் காரணம் என்ன ?